பெயர் - விஜயன் விஜிகலா.

கிராமம் - தேராவில்.

எனது பெயர் விஜயன் விஜிகலா. நான் தேராவில் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் நான்கு பிள்ளைகள் மற்றும் கணவருடன் வசித்து வருகிறேன். இரண்டு ஆண் பிள்ளைகளும் இரண்டு பெண் பிள்ளைகளும் உள்ளனர். எனது கணவர் கூலி வேலைக்கு செல்கின்றார். இவ்வேளையில் நான் எனக்கும் எனது குடும்பத்திற்கும் உதவி வழங்கப்பட்டது. எமக்கு உதவியிணை வழங்கிய ரொகானா என்பவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது குடும்பம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இருக்கையில் எமது கிராமத்திற்கு சிய உதவிக்குழுத் திட்டம் கொண்டுவரப்பட்டது. பணியாளர் ஒருவர் என்னிடம் வருகை தந்து என்னை சிய உதவிக் குழுவில் இணையுமாறு கேட்டார். அதன் பின்பு ஐந்து, ஆறு கூட்டங்களுக்கு சென்று வந்தேன் என்னால் சேமிப்பிணை செய்ய முடியாத நிலை காணப்பட்டது. என்னிடம் சேமிப்பு நிலைத்திருக்க வில்லை. அதனால் இந்த திட்டத்தின் மூலம் சேமிப்புக் குழுவில் இணைந்த போது ஆரம்பத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் இந்தக் குழு புதிய அனுபவமாக இருந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் அனைவரும் சேர்ந்து கூட்டத்திற்கு சென்று வந்தோம். அங்கு பணியாளர் ஒருவரால் சேமிப்பின் முக்கியத்துவம் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது. அதன் பின்பு சேமிக்க வேண்டும் என நம்பிக்கையும் உறுதியும் எனக்கு ஏற்பட்டது. மற்ற பெண்களுடன் சேர்ந்து சேமிக்கும் போது தொடர்ந்து சேமிக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வு அதிகரித்தது. பணியாளர் ஒருவர் எமது தேவைகள் பாதிக்கப்படாமல் ஒரு வாரத்திற்கு எவ்வளவு சேமிக்கலாம் என்று எனக்கு திட்டமிட உதவினார். அதன் படி நான் ஒவ்வொருவாரமும்

தற்பொழுது எனது வருமானத்தை மையமாக கொண்டு
ஒரு வாரத்திற்கு 300 ரூபாயாக சேமிக்கத் தொடங்கினேன். தற்பொழுது
என்னிடம் 135700/- ரூபா சேமிப்பு பணம் உள்ளது.
குழுவிலிருந்து 150,000/- ரூபா கடனைப்பெற்று எனது மூத்த
மகளின் உயர்தர படிப்பிற்காக அதனை செலவழித்தேன். இதனால்
எனது வேலை நிறுத்தப்படவில்லை. யாரிடமும் கடன் வாங்காமல் எனது
சொந்தப்பணத்தில் எனது பிள்ளையின் படிப்பை பார்த்துக் கொள்கிறேன்
என்பது பெருமையான விடயம் என்பதை எனக்கு திருப்தியளிக்கிறது
தற்பொழுது எனது குடும்பத்தின் எதிர்கால தேவைகளை நிறைவேற்றுவ
-தற்காக எவ்வித பயமும் எனக்கு ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்தின் மூலம் வாழ்வாதாரமாக தையல் மெசின்
ஒன்றினை வாங்கியிருந்தேன். தையல் தொழில் தெரிந்ததனால் சிறப்பான
முறையில் தையல் தொழில் செய்து வருகிறேன். ஒரு மாத வருமா
-னமாக கிட்டத்தட்ட 32000/- ரூபா வருமானம் வந்துகொண்டி
-ருக்கின்றது. திட்டத்தில் சேருவதற்கு முன்பு எனக்கு தையல் தெரியும்
ஆனால் எனது திறமையை முழுமையாக காட்டுவதற்கு எவ்வித நிதியும்
என்னிடம் காணப்படவில்லை. திட்டத்தின் மூலம் கிடைத்த என்னை நானே
கிராமத்தில் அறிமுகப்படுத்திய பின்பும் சரியான பயிற்சிகளின் பின்பும்
சரியான ஆலோசனைகளில் பெண்களுக்கான ஆடைகளை தைத்து வருமானத்
-தை ஈட்டி வருகிறேன் என்பது குறிப்பிடத்தக்கது. எனது குடும்பத்தின்
சில தேவைகளையும் என்னால் நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக
இருக்கிறேன். பெண்ணால் என்ன செய்யமுடியும் என்ற கிராமத்தின்
கேள்விகளுக்கு நான் விடையளித்துக் கொண்டிருக்கிறேன் என்பது
குறிப்பிடத்தக்கது.

எனது நாளாந்த உணவு வகைகளை பார்த்தால் திட்டத்திற்கு முன்பு பருப்பும் சோறும் தான் உண்ணக்கூடிய நிலைமை என்னிடம் காணப்பட்டது இப்பொழுது அதாவது சுய உதவிக் குழுவில் இணைந்து கொண்டதன் பின்னர் அங்கு கொடுக்கப்பட்ட பயிற்சிகளின் பின் வீட்டுத்தோட்டம் ஒன்றினை செய்யத் தொடங்கினேன். அதில் கத்தரி வெண்டி. பயற்றங்காய், கீரை வகை போன்ற பயிர்களை பயிரிட்டு சத்தான உணவுகளை நாமும் எனது குடும்பமும் உண்ணத் தொடங்கினோம். இதனை வைத்து பெருமையடைகிறோம் என்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு வாரமும் உணவுக்கு போதுமான பணம் இருக்குமோ? என்ற பயம் இப்போது இல்லை. பழைய நிலைமை எனக்கு முழுமையாக மாறிவிட்டது. என்னிடம் காணப்படுகின்ற மரக்கறிகளை அயலவர்களிடம் கொடுத்து அவர்களிடம் பணம் பெற்று மீன் மற்றும் இறைச்சி வகைகளை வாங்கி எனது பிள்ளைகளுக்கு சமைத்து கொடுப்பதில் நான் மகிழ்ச்சிய-டைகிறேன். எனது பிள்ளைகள் வீட்டுத்தோட்ட செடிகளை பராமரி-ப்பதிலும் தண்ணீர் ஊற்றுவதிலும் மகிழ்ச்சி அடைகிறார்கள்

வறுமை நிலை என்னை வாட்டி வதைத்த பொழுது என்னால் சமூகத்துடன் ஒன்றிணைந்து போக முடியவில்லை. ஏதாவது என்னால் கருத்துக்கள் சில கலந்துரையாடல்களில் பகிர்ந்து கொண்டு கூறினால் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக காணப்படவில்லை. அதனை எத்தனையோ நாள் நினைத்து நான் கவலைப்பட்டிருக்கிறேன் அந்த நிலை இப்பொழுது மாறி என்னுடைய பலதரப்பட்ட கருத்துக்-களை கேட்கிறார்கள் என்பது பெருமைக்குரிய விடயமாகும். அத்துடன் நான் மகிழ்ச்சியாகவும் உள்ளேன். இப்பொழுது எந்தச் சந்தர்ப்பத்திலும் எனது எதிர்காலம் குறித்து நான் கவலைப்படவில்லை.

நான் தற்பொழுது படித்த இலக்காக இரண்டு தையல் மெசினை பெற்று என்னைப்போல வறுமையால் வாடுகின்ற இரண்டு பெண்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்க வேண்டும் எனது இலக்காகும்.

தற்பொழுது இவ் திட்டங்களானது எங்களை விட்டு போகிறது என்பது மிகப்பெரிய கவலையாக இருந்தாலும் எனது எதிர்காலத்தை நினைத்து ஒரு போதும் கவலைப்பட்டதில்லை. ஏனென்றால் எனது சொந்த வருமானத்தில் எனது குடும்பத்தின் அனைத்து செலவுகளையும் கொண்டு செல்வேன் என்பதில் உறுதியாய் உள்ளேன் என்பதனை மகிழ்ச்சியுடன் உங்களுக்கு கூறிக் கொள்கி-றேன்.

இவ் எனது மிகப்பெரிய மகிழ்ச்சிக்கு காரணமாக இருந்த ரொசான் மற்றும் அவரது குடும்பம் மென்மேலும் சிறப்பாகவும் சந்தோசமாகவும் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என நாளும் எனது குடும்பமும் இறைவனை மன்றாடுகிறோம். இவ் உதவினை வழங்கிய அவரும் அவரது குடும்பமும் நீண்ட ஆயுளோடும் நோய் நொடிகள் ஏதும் இல்லாமல் வாழ வேண்டும் எனவும் மகிழ்ச்சியாகவும் சந்தோசமா வாழ இறைவன் ஆசிகள் என்றும் கிடைக்கவேண்டும் எனவும் இறைவனை பிரார்த்திப்பதோடு இவ் உதவினை வழங்கியதற்காக அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் கோடான கோடி நன்றிகளை எனது குடும்பம் சார்பாக தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி.

* வி.விசிகலா